Registered as a Newspaper in Ceylon

விலை சதம். 10

# ஈழநாடு

EELA N.DU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 8 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 3 ஆம் நாள் ஷஃபான் பிறை 12 (17-12-[illegible]) வியாழக்கிழமை இதழ் 308

ஈழநாடு

சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-60 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# பார்லிமெண்ட் நள்ளிரவு கலைக்கப்பட்டது

## மார்ச் 22-ல் தேர்தல்

## புதிய பார்லிமெண்ட் ஏப்ரல் 5-ம் திகதி கூடும்

### கவர்னர் ஜெனரலின் கஸட் அறிவித்தல்

கொழும்பு, வியாழன்

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் சிபார்சின் பேரில் நேற்று நள்ளிரவு 12 மணிக்கு கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா இலங்கையின் 5-வது பார்லிமெண்டைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டார். புதிய தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் திகதியும், புதிய பார்லிமெண்ட் கூடும் திகதியும் அறிவிக்கப்பட்டது.

கவர்னர் ஜெனரல் விசேஷ 'கஸட்' அறிவித்தல் மூலம் இவற்றை வெளியிட்டுள்ளார்.

புதிய தேர்தலுக்கான திகதி அடுத்த வருடம் மார்ச் 22 என்றும் இதற்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் திகதி ஜனவரி 11 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய பார்லிமெண்ட் ஏப்ரல் 5-ம் திகதி கூடும் என்றும் கவர்னர் ஜெனரல் அறிவித்துள்ளார்.

பார்லிமெண்டைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்த [illegible] இம்மாதம் 4-ம் திகதி [illegible] நடைபெற்ற மந்திரிசபை விசேஷ கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பார்லிமென் [illegible] கலைக்கப்படுவது பற்றியும் அடுத்த பொதுத் தேர்தல் பற்றியும் பிரதமர் சிறிமா பண்டாரநாயகா இம்மாதம் 9-ம் திகதி அறிவித்திருந்தார்.

## இ. போ. ச. ஊழியருக்கு போனஸ் கிடைக்கும்

### போக்குவரத்து மந்திரியின் தாராளம்

கொழும்பு, வியாழன்

அடுத்தவருடம் ஜனவரி மத்தியிற்குள் இ. போ. ச. ஊழியருக்கு 'போனஸ்' வழங்க போக்குவரத்து மந்திரி திரு. தனில் முனசிங்க தீர்மானித்துள்ளார்.

இது புதுவருடபோனஸாக வழங்கப்படும். இதனால் சுமார் 25,000 இ. போ. ச. ஊழியர்கள் நன்மைபெறுவார்கள்.

1964-ம் வருடத்தில் இ.போ.ச.வுக்குக் கிடைத்த இலாபத்திலேயே இந்த போனஸ் வழங்கப்படுவதாகவும் ஊழியர்களின் ஆர்வம்கொண்ட உழைப்பினாலேயே இவ்வித இலாபம் கிடைத்தது என்றும் மந்திரி தெரிவித்துள்ளார். இதுவரை சுமார் ஒன்றரைக் கோடி ரூபா இலாபமாகக் கிடைத்துள்ளதென்றும் இந்த வருட இறுதியில் 2 கோடி ரூபா இலாபமாகக் கிடைக்குமெனவும் அவர் கூறியுள்ளார்.

மந்திரி மேலும் தெரிவிக்கையில் ஆசியாவிலேயே சிறந்த பஸ் சேவையை இலங்கையில் நடத்த தாம் உத்தேசித்துள்ளதாகவும் உலகிலேயே மிகவும் குறைந்த தொகையான [illegible] கட்டணம் இலங்கையில் அறவிடப்படுகிறதென்றும் எடுத்துக்[illegible]

## சதிவழக்கு விசாரணை ஜனவரி 13-ம் திகதிவரை ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

சதிவழக்கு விசாரணையை நடத்திவரும் பிரதம நீதியரசர் திரு. சன்சோனி இன்று நீதியரசர் திரு. எம். பி. டி. சில்வாவுடன் நீதிமன்றத்துக்கு வந்தபோது, நீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோ சுகவீனமுற்றிருப்பதாகவும் நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டாமென டாக்டர்கள் கூறியிருப்பதாகவும் தெரிவித்து இதன் காரணமாக விசாரணையை ஒத்திவைக்க வேண்டியிருப்பதாக அறிவித்தார்.

இந்த சமயத்தில், ஜனவரி 14-ம் திகதி (தைப்பொங்கல்) விடுமுறை தினமாகையால் இந்த மாதம் 15-ம் திகதிவரை விசாரணையை ஒத்திவைக்கலாமா என அதிமன்ற எதிரி ஒருவரின் சார்பில் ஆஜராகும் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கேட்டுக் கொண்டார். இந்த திரு. சன்சோனி நீதிமன்றம் [illegible] முறை [illegible] கடைப்பிடிக்க வேண்டுமெனத் தெரிவித்து அடுத்தவருடம் ஜனவரி 13-ம் திகதிவரை விசாரணையை ஒத்திவைத்தார்.

## என். எம். இன்று வருகிறார்

கொழும்பு, வியாழன்

லண்டனுக்குச் சென்றிருந்த நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா இன்று பகல் 10-45-க்கு கொழும்பு வந்து சேருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோழிகளுக்கு 'பியாண்ட'

வவுனியா, புதன்

வவுனியா நகரத்தில் சென்ற பல மாதங்களாக கோழிகள் தினம்தோறும் களவு போவதைத் தொடர்ந்து வவுனியா பொலிசில் புகார் செய்யப்பட்டது.

இதன் விளைவாக பொலிசார் குறிப்பிட்ட இடத்துக்கு சென்றபொழுது அவ்விடத்தில் மூன்று கோழிகள் இருந்தன. இக்கோழிகளின் சொந்தக்காரர்களைக் கண்டுபிடிப்பது பொலிசாருக்கு பெரும் பிரச்னையாகி விட்டது. கோழிகள் இருக்க வீட்டார் அக்கோழிகள் தங்களுடையதென்று கூறுகின்றார்கள். பொலிசில் புகார் செய்தவர்களை தங்களுடைய தெனக் கூறுகின்றனர். இந்நிலையில் பொலிசார் கோழிகளை பொலிசில் கொண்டுவந்து தக்கபாதுகாப்புடன் வைத்துள்ளனர்.

## 3 நாட்கள் கடல் நீரில் உயிர் வாழ்ந்த தஞ்சாவூர் மீனவர்

### சட்டவிரோதக்காரரென மாதகலில் ராணுவம் கைது செய்தது

மாவிட்டபுரம், புதன்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி வாசியான குப்பு நாராயணன் என்பவர் மூன்று நாட்களாக உண்ண உணவின்றி குடிக்க நீரின்றி மீன்பிடிப் படகிலிருந்து தத்தளித்த பின் நேற்று மாலை மாதகல் கடற்கரையில் படகுடன் வந்தடைந்தார்.

இவர் சட்டவிரோதக் குடியேற்றக்காரரெனச் சந்தேகித்த மாதகல் இராணுவமுகாமைச் சேர்ந்த லெப்டினண்ட் ரணவாக்கே இவரைக் கைது செய்ததுடன் 2000 ரூ. பெறுமதியான மீன்பிடிப்படகையும் கைப்பற்றினார். [illegible] ராணுவ விசாரணையின் பின்னர் இவரை இராணுவத்தினர் காங்கேசன்துறை சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்கள்.

குப்பு நாராயணன் காங்கேசன்துறைப் பொலிஸாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் தான் தென்னிந்திய தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவனென்றும் தான் சட்டவிரோத குடியேற்றக்காரன் அல்லவென்றும் தான் சென்ற 13-ம் தேதி காலை 11 மணிக்கு மீன்பிடிக்க ஆழ்கடலுக்கு படகில் சென்றதாகவும் கரையிலிருந்து சுமார் 6 மைல் தூரம் [illegible] போய்ச் சென்றபின் மாலை 4 மணியளவில் [illegible] இயந்திரம் பழுதாகி விட்டதாகவும் அச்சமயம் பலத்த காற்று வீசவே நங்கூரத்தை அறுத்துக்கொண்டு படகு சென்றதாகவும் அதைத் தன்னால் கட்டுப்படுத்த முடியாது போனதாகவும் இதனால் 3 தினங்கள் கடலில் உண்ண உணவோ நீரோ இன்றிக் குளிரினால் உடம்பு நடுங்க எந்த நேரம் என்ன நேரும் என்ற பயத்தில் கடவுளை வணங்கிக்கொண்டு கடல்நீரை குடித்துக்கொண்டதாகவும்

(6-ம் பக்கம் பார்க்க)

## "நல்லூர் காவலரின் பிரிவு சைவமக்களுக்குபெரும் இழப்பு"

யாழ்ப்பாணம், வியாழன்

தென்னிந்தியாவிலுள்ள சைவக்கோயில் வீதிகளுக்கு ஆசாரத்துடனும் கட்டுப்பாட்டுடனும் காலநேரம் தவறாத பூசைகளுடனும் நல்லூர் கந்தசுவாமி கோயிலை சிறப்பான முறையில் நிர்வாகித்து வந்த நல்லூர் கந்தசுவாமிகோயில் ஆதீன கர்த்தா ஸ்ரீ இ. சண்முகதாஸ் மாப்பாண முதலியாரின் இழப்பு தமிழ்பேசும் மக்களுக்கும் குறிப்பாக சைவமக்களுக்குப் பெரும் இழப்பாகுமென நேற்று மாலை நல்லூர் செம்மணி மயானத்தில் நடந்த இறுதிக் கிரிகைகளின் போது யாழ்ப்பாணம் மாநகர சபை அங்கத்தவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் கண்ணீர் மல்கிய கண்களுடன் மேது நிரு[illegible]பரிடம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு மரணமான சண்முகதாஸ் மாப்பாண முதலியாரின் சடலம் இறுதிக் கிரிகைகளுக்காக இன்று மாலை நல்லூரிலுள்ள அவரது இல்லத்திலிருந்து சகல மரியாதைகளுடனும் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பெருந்தொகையான மக்கள் மிகவும் துக்கம் தோய்ந்த முகங்களுடன் நல்லூர் காவலரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டனர். வீதியின் இருமருங்கும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

காவலரின் உயிர் அவரை விட்டுப் பிரிந்திருந்தபோதிலும்

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

அன்பே ஈசன் திருவுருவம். தாயின் அன்பிலும் மக்களின் ஒப்புரவு, நட்பு காதல் ஆகியவற்றிலும் ஈசன் திருவொளியைக் காண்கிறோம். பிராணியும், பறவையும், பூச்சியும் தத்தம் குஞ்சுகள்மீது காட்டும் அன்பும் உலகெலாம் பரந்திருக்கும் கடவுளின் திரு அவதாரமேயாகும்.

— ராஜாஜி

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 3 உ (17-12-64)

## பர்மாவுக்கு அன்னக் காவடி

அரிசிக்காக இரு விசேஷ தூதர்களை இலங்கைப் பிரதமர், நேற்று பர்மாவுக்கு அனுப்பியுள்ளார். இந்த அன்னக்காவடி வெற்றிபெற்றால்தான் இங்கு நமக்கு அடுத்த 1965-ம் வருடத்தில் அரிசி தட்டாமல் கிடைப்பதாக இருக்கும்.

பல வருடகாலமாக நமக்கு பர்மா அரிசி அனுப்பி வந்துள்ளது. நடப்பு வருடத்திலும் அனுப்பி வருகின்றது. ஆனால் தொன் ஒன்றுக்கு விலையை 86 பவுணிலிருந்து 87 பவுணுக்கென்று அக்டோபரில் இங்கு வந்த பர்மிய வர்த்தகக்குழு உயர்த்தியது காரணமாக அப்பேச்சுகள் முறிந்தன. உலகில் அரிசித் தட்டுப்பாடு அதிகமிருப்பதை காரணமாகக் கொண்டு பர்மா விலையையும் உயர்த்தியுள்ளது போலும்.

ஏற்கனவே அரிசியை அதிக விலைக்குவாங்கி குறைந்த விலைக்கு இலங்கை அரசாங்கம் மக்களுக்கு விநியோகிப்பதால் இங்கு அரசாங்கத்துக்குப் பெரிய பணநெருக்கடி ஏற்பட்டுள்ளது. அரிசிக்கு இன்னும் அதிகவிலை கொடுப்பதானால் பணநெருக்கடி சமாளிக்க முடியாது போகலாம். இது தேர்தல் சமயமானதால் பங்கீட்டு அரிசி விலையையோ அளவையோ குறைக்கவும்முடியாது. ஆகவே விலைவிஷயமாக விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையும்பர்மாவும் ஆசிய நாடுகள் மட்டுமல்ல, பௌத்த நாடுகள். புதிதாக விடுதலையான இவ்விரு நாடுகளும் பரஸ்பரம் உதவ வேண்டிய அவசியம் அதிகமுண்டு. நம் அத்தியாவசிய உணவுக்குப் பர்மா அதிக விலையை வற்புறுத்துவதானால், நாம் அதைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம். நிர்க்கதியான இந்த நிலையை அதிகம் சாதகமாக்கிக் கொள்ளாமல் சமரசமாக ஒரு விலைக்கு பர்மா ஒப்புக் கொள்ளுமென்றே நம்பப்படுகிறது.

நமக்கு வருடத்தில் சுமார் 6 லட்சம டன் அரிசி வெளிநாடுகளிலிருந்து கிடைக்க வேண்டியுள்ளதாம். பாகிஸ்தானிடமிருந்து ஒரு லட்சம், சீனத்திடமிருந்து 2 லட்சம், தாய்லாந்திடமிருந்து ஒரு லட்சம், பர்மாவிடமிருந்து 2 லட்சம் டன்னும் வாங்கினால்தான் இங்கு அரிசித் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமென்று தெரிகிறது. செலாவணியில் பெரும்பகுதியும் அரிசிக்காகவே செலவிட வேண்டியுள்ளோம். அத்தியாவசியதேவையான அரிசிக்குப் பிறரையே நம்பியுள்ள அவலநிலை சீக்கிரத்தில் மாறுவதற்கான அறிகுறிகள் இல்லை.

தேசிய முக்கியம் வாய்ந்த இப்பிரச்சினையில் அரசாங்கம் மட்டுமன்றி பல அரசியல்கட்சியினரும் ஒத்துழைத்தால்தான் இதை ஓரளவாவது தீர்க்க முடியும். இங்கு நீர்வளம், நிலவளம், ஆள்பலம் எல்லாம் உள்ளன. ஆனால் பல நாடுகளுக்கும் நாம் அன்னக்காவடி தூக்க நேரிட்டுள்ளது பெரிய வெட்கக்கேடு. நாட்டின் செல்வமும் பெருவாரியாக வெளியேறுகின்றது. குறுகிய இனவெறியைவிட்டு மேலான தேசிய நலனைக்கருதி பல அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பின், இந்த அவலநிலை தீர வழி பிறக்கலாம். இயற்கை நமக்குப் பெரிதும் உதவியும் நாம் என்றென்றும் நம் உணவுக்குப் பிறரையே நம்பித்தான் வாழ வேண்டுமா?

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## நல்ல சந்தர்ப்பம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில், சிங்களப்பகுதிகளில், எந்த ஒரு அரசியல் கட்சியும், மந்திரிசபை அமைக்கக்கூடிய பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்று ஆட்சி செலுத்த முடியாத நிலையில் இருக்கிறது. இந்த நிலைமையில் நமது தமிழ்ப் பகுதியில் போட்டியைத் தவிர்த்து ஒற்றுமையுடன் ஒரே கட்சியின்கீழ் ஒன்றுபட்டு எமது அங்கத்தவர்களைத் தெரிவு செய்வோமானால், இந்த அங்கத்தினர்களின் உதவியின்றி அரசாங்கம் செயல்படமுடியாத நிலையில் நமது உதவியை நாடிவருவார்கள். அப்பொழுது நாம் இழந்த உரிமைகளை நிலைநாட்டச் சந்தர்ப்பம் கிடைக்கும். அப்படி இல்லாமல் பல அரசியல் கட்சிகளும் சுயேச்சைவாதிகளும் போட்டியிட்டு, ஒவ்வொருவரும் தமது இஷ்டம்போல் செயல்பட ஆரம்பிப்பர், தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கக்கூடிய அரசியல் சூழ்நிலை, எதிர்வரும் தேர்தல் காலத்தைப்போல் முன்னெப்பொழுதும் இருந்ததில்லை. இனிவரப்போவதும் இல்லை. இவ்வித சூழ்நிலையில் தமிழ்த் தலைவர்கள் போட்டியைத் தவிர்த்து ராஜதந்திரத்துடனும், அந்தரங்கசுத்தியுடனும் நடந்து கொள்வார்களானால் தமிழர்களுக்கு எதிர்வரும் காலம் பொற்காலம் எனலாம்.

அ. தமிழ்மாறன்
யாழ்ப்பாணம்

## சமய விடுதலை நாட்கள்

கடந்த காலங்களில் தைப்பூசம், மகாசிவராத்திரி, ஆடி அமாவாசை விஜயதசமி, உள்ளூர்க் கோவில் திருவிழாக்கள் என்பன அறுபது விகிதத்துக்கு மேற்பட்ட சைவ மாணவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு சமய விடுதலை நாட்களாக வழங்கப்பட்டிருந்தன. தற்சமயம் அவை நிறுத்தப்பட்டுள்ளன என அறிகிறோம்.

சிங்களப் பௌத்தர்கள் 'பண' பிரித், 'சில்' போன்ற தம் சமய அனுட்டானங்களை எவ்விடத்திலும் நிறைவேற்ற முடியும். ஆனால் சரஸ்வதி பூசை ஒன்றைத் தவிர ஏனைய விரத நாட்களை நாம் கோவில்களில்தான் அனுட்டிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

இப்படியான சந்தர்ப்பங்களில் பாடசாலைக்குச்சென்று விரதத்தையும் மேற்கொள்வதென்பது இயலக்கூடிய செயலா? சைவாசிரியர்களும் சைவ மாணவர்களும் இதனால் பெரிதும் இடர்ப்படுவர். இவ்விரத நாட்களில் பாடசாலைக்கு வராத சைவாசிரியர்கள் லீவு பெறவேண்டியவர்களாயுள்ளனர். கிறிஸ்தவ ஆசிரிய சகோதரர்கள் தம் தாபனங்கள் மூலம் முயன்று தமது சமய நாட்களைப் பாடசாலை விடுதலை நாட்களாய்ப் பெற்றுள்ளனர் என அறிகிறோம்.

எனவே அவர்களின் நன்முயற்சியை முன்னோடியாகக் கொண்டு எமது அகில இலங்கைச் சைவமன்றம், வடமாநில சைவ இளைஞர் மன்றம் போன்றவைகளும், ஏனைய சைவ ஸ்தாபனங்களும், சைவப் பெரியார்களும் ஒருங்கு சேர்ந்து எமது நியாயமான கோரிக்கையை வித்தியாபகுதியாருக்குச் சுட்டிக்காட்டி எம் உரிமையைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம்.

சு. சாந்தமூர்த்தி
சைவாசிரியர் சங்க காரியதரிசி
உடுப்பிட்டி

## வட்டுக்கோட்டையில் திருவெம்பாவை பஜனை

யாழ்ப்பாணம், வியா

வட்டுக்கோட்டை சிவன் இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் இங்குள்ள மாணவர்களும், சங்க அங்கத்தவர்களும் தினம் அதிகாலை நான்கு மணிதொடக்கம் திருவெம்பாவை நடை பஜனை செய்துவருகின்றனர்.

## "சம்பள உயர்வு வேண்டும்"

[illegible]றை, புதன்

"சகல அரசாங்க ஊழியர்களிலும் பார்க்க கிராமசேவையாளர்கள் கூடுதலான மணித்தியாலங்கள் வேலை செய்வதாலும், பொது விடுமுறைநாட்களிலும் கடமைபுரிவதாலும் அவர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டும்" என்று சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

## சோவியத் கலைஞர்களின் கலை நிகழ்ச்சி

குரும்பசிட்டி, புதன்

கலாசார இலாகாவினாலும் சோவியத் ஸ்தானிகராலயத்தினாலும் அழைக்கப்பட்டிருக்கும் சோவியத் கலைஞர் குழு இசை, கிராமிய நடனக்காட்சிகளை யாழ். நகர மண்டபத்தில் நடாத்துவதற்கென வியாழக்கிழமை காலை புதிய 'அவ்ரோ 748' விமானம் மூலம் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ் பிரதேச கலாமன்றத்தினரால் வரவழைக்கப்பட்டுள்ள சோவியத் கலைஞர் குழுவை யாழ். அரசாங்க அதிபர் திரு நெவில் ஜெயவீராவும், பிரதேச கலாமன்றத்தினரும், இலங்கை—சோவியத் நட்புறவுக்கழகத்தினரும் விமானநிலையத்தில் வரவேற்பார்கள்.

## சுகர்ணோ

ஜாகர்த்தா, டிச. 16

இந்தோனேஷியத் தலைவர் டாக்டர் சுகர்ணோ கடுமையாகச் சுகவீனமுற்றிருக்கிறார் என்ற செய்தியை அவரது டாக்டர் மறுக்கிறார். ஜனாதிபதி சுகர்ணோ வழக்கமான தனது அலுவல்களைக் கவனித்து வருகிறாரென்றும் அவர் தெரிவித்தார்.

## ஷாவோவின் யாழ். விஜயம்

குரும்பசிட்டி, புதன்

மக்கள் சீனக் குடியரசின் ஸ்தானிகராலய இரண்டாவது காரியதரிசி திரு ஷாவோவின் இம்மாதம் 26-ம் திகதி யாழ் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சீன ஓவிய, புத்தக, புகைப்பட, தீப அலங்கார கண்காட்சியில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வருகிறார்.

இலங்கை—சீன நட்புறவுச் சங்க ஆதரவில் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இக்கண்காட்சியில் வேறுபல சீன ஸ்தானிகராலய அதிகாரிகளும் கலந்துகொள்வர். யாழ்ப்பாணப் பகுதியில் சீன தகவல் படக்காட்சிகளும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## நயினாதீவில் மணிவாசகர் விழா

ஊர்காவற்றுறை, புதன்

நயினாதீவு ஐக்கிய வாலிய முன்னணியின் ஆதரவில் இம்மாதம் 18-ம் திகதி மாலை மணிவாசகர் விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய திருவீதியில் நடைபெறும் இவ்விழாவை நயினாதீவு கிராமசபைத் தலைவர் திரு. சி. க. தம்பையா ஆரம்பித்து வைப்பார். பண்டிதர் திரு. க. பொ. இரத்தினம் விழாவுக்குத் தலைமை தாங்குவர்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. ந. முத்தையா, திரு. க. சண்முகநாதபிள்ளை, சங்கீத பூஷணம் செல்வி. க. கமலாம்பிகை உட்படப் பலர் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டுள்ளனர். விழாவின் இறுதி நிகழ்ச்சியாக அருட்கவி சீ. விநாசித்தம்பியின் சங்கீத கதாப்பிரசங்கம் இடம்பெற்றுள்ளது.

## கலகெதரவில் மூவர் போட்டி

கண்டி, புதன்

கலகெதர தொகுதிக்கு போட்டியிடும் அபேட்சகர்களின் விண்ணப்ப பத்திரங்கள் நேற்று கண்டி அரசாங்க அதிபர் திரு உபாலி குணரத்னாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஐக்கிய தேசிய கட்சி சார்பில், திரு. டபிள்யூ எம். ஜி. திசகிரிபண்டாவும், சுதந்திர கட்சி சார்பில் திருமதி தாமரா குமாரி இலங்கரத்னவும், எம். ஈ. பி. சார்பில் திரு. பிரேமசிங்க சமரநாயக்காவும் போட்டியிடுகிறார்கள்.

## மின்னேரியாவில் போட்டியிடவேண்டும்

கம்பளை, புதன்

திரு சி. பி. டி. சில்வா அரசாங்க கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்கு சென்றதன் மூலம், காலைவாரிவிட்டார் என்று கூறும் பிரதமர், சிறிமாவோ பண்டாரநாயக்கா, மின்னேரியா தொகுதியில் போட்டியிட்டு அதை நிரூபிக்கவேண்டும் என்று கம்பொலை எம்.பி. திரு. எல். பி. தசநாயக்கா கூறினர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண், மாதே வளருதியோ வன் செவியோ நின் செவிதான் மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய் வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன், ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

- ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணமெங்கும் இப்போது 'நல்லூர் முதலாளி'யின் திடீர் மறைவைப் பற்றித்தான் பேச்சு. நேற்றுக்காலை இச்செய்தியைக் கேட்டதும் பலரும் திடுக்கிட்டுப்போயினர். இவ்வளவு பெரிய கெட்ட செய்தியை யாரும் சற்றும் எதிர்பார்க்கவேயில்லை. தாய்மார்கள் பலரும் கண்ணீர்விட்டனர்.

"அந்தப் பொல்லாத எமன் அவரை எடுத்துச் செல்ல நல்லூர்க் கந்தன் எப்படித்தான் சம்மதித்தாரோ!"

"கொடியேற்றத்தின்போதும் தேர்த்திருவிழாவிலும் சுவாமியைப் பார்க்கும் கண்களெல்லாம் நல்லூர் முதலாளியின் விபூதி உருத்திராட்ச சிவப்பொலிவையும் கண்டு ஆனந்திக்குமே. இனி அந்தச் சிவப்பொலிவை எப்போது காணப்போகிறோம்"

"வைகுண்ட ஏகாதசி மிகப் புனிதமான தினம். அன்று மறைந்த அவர் வைகுண்டத்துக்கே சென்றிருக்கிறார். பெரிய புண்ணியவான்."

இப்படிப் பல தாய்மார்களும் பலவிதமாக அவரைப் போற்றிப் புகழ்வதைக் கேட்டேன்.

நெஞ்சு வருத்தம் காரணமாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலே அவர் விபூதி உருத்திராட்சம் தரித்துப் படுத்திருக்க காட்சியைக் காணத் தம்மால் கண்ணீரை அடக்கமுடியவில்லை என்றார் ஓரன்பர் மிகத் துக்கத்துடன்.

நிமிஷமும் பிசகாமல் கோவில் நிர்வாகத்தையும் திருவிழாக்களையும் மேலாக அவர் நடத்திவந்த புகழ் நாடறியும். தம் வீட்டில் இருந்துகொண்டே கோவிலில் நடக்கும் காரியங்களையெல்லாம் கண்டறிந்து ஆட்சி செலுத்திவந்தாராம் அந்தக் காவலர்.

எப்போதும் கோவில் அபிவிருத்தியைப் பற்றித்தான் எண்ணம். அதன் தொண்டுக்காகவே வாழ்ந்தார் அவர்.

அழகான புதுத்தேரைக் கட்டி அதில் அறுமுகனைப் பவனிசெய்வித்துப் பார்க்க வேண்டுமென்று பெரும் ஆசை அவருக்கு.

பத்தே மாதங்களுக்குள்ளாக இதை வெற்றியுடன் நிறைவேற்றி அவர் விடைபெற்றுக் கொண்டுவிட்டார். கண் திருஷ்டிதான் அவரது திடீர் மறைவுக்குக் காரணமென்கிறார் ஓரன்பர். இது எப்படியாயினும் அவரது இந்தப் பிரிவு அக்கோவிலுக்கு மட்டுமல்ல. இங்கு சைவசமூகத்துக்கே பெரும் நஷ்டமாகும்.

* * *

நல்லூர் கோவில் நிர்வாகம் தூய்மைக்கும் ஆசார அனுஷ்டானத்துக்கும் பேர்போனது. அப்பேர்ப்பட்ட கோவிலில் நந்தனார் குலத்தவரை முதன்முதலாக அனுமதிக்கத் துணிந்ததைக் கேட்டதும் அவரது அன்பையும் சமய விஷயத்தில் விரிந்த மனப்பான்மையையும் உணரமுடிந்தது.

காலஞ்சென்ற கிறிஸ்தவ பாதிரியாரான வண. பிதா லாரங்கிறாக கத்தோலிக்க ஆலயத்தில் வருடாவருடம் விசேஷ ஆராதனைக்கு ஒழுங்கு செய்ததுடன் அந்த ஆராதனையின்போது அவரே சிவசின்னங்களுடன் அங்கு பிரசன்னமாயிருக்கும் காட்சி நம்பமுடியாதது.

பலசமயத்தவரின் விசேஷ மதிப்பையும் பெற்றிருந்த அந்தச் சைவவீரர் யாழ்ப்பாணத்துக்கே பெருமை அளித்து வந்தார். இனி அப்பேர்ப்பட்டவரை எப்போது எங்கு காணப்போகிறோம்!

(4-ம் கலம் பார்க்க)

# கோஸிஜின், பிரஸ்னேவ் பிரிட்டன் வரக்கூடும்

## ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்து பேசபிரிட்டிஷ் பிரதமர் முயற்சி

லண்டன், டிச. 16

**பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் ரஷ்யத் தலைவர்களான பிரஷ்னேவ், கோஸிஜின் ஆகியோரைச் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறார்.**

இதற்குப் பூர்வாங்கமாக பிரிட்டிஷ் அரசாங்கம் ரஷ்ய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

எனினும் ரஷ்யத் தலைவர்கள் பிரிட்டனுக்கு வருவார்களா என்பது குறித்து இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை.

மேற்கு நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்திய பிறகே திரு. வில்சன் ரஷ்யத் தலைவர்களைச் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறார். மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் எர்ஹார்ட், பிரெஞ்சு அதிபர் டிகால் ஆகியோரை அவர் சந்திக்கவிருக்கிறார். இந்தச் சந்திப்பிற்குப் பின் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனை மீண்டும் சந்திப்பார்.

இதற்குப் பின்பே பிரிட்டிஷ் தலைவர்களைச் சந்திப்பார் என அறிவிக்கப்படுகிறது. ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோ வருகிற மார்ச் மாதம் லண்டனுக்கு வருகிறார்.

இதற்கிடையில் ரஷ்ய மக்களுடன் சமாதான தொடர்பு கொள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

## காந்தி வாழ்வு திரைப்படம்

லண்டன், டிச. 16

மகாத்மா காந்தியின் வாழ்க்கை பற்றிய திரைப்படம் ஒன்று பிரிட்டனில் தயாராகும் என லண்டனில் அறிவிக்கப்பட்டது. பிரிட்டனும், இந்தியாவும் கூட்டாக இந்தப்படத்தைத் தயாரிக்கின்றன. காந்திஜியின் 18-வது வயதிலிருந்து அவரது வாழ்வைச் சித்தரிக்கும் இந்தப் படத்திற்கான படப்பிடிப்பு வேலைகள் ஆபிரிக்காவிலும், பிரிட்டனிலும், இந்தியாவிலும் ஆரம்பமாகும். திரை வசனங்கள் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுவிட்டன.

## "மாஸ்கோ மகாநாட்டில் கலந்து கொள்ளமாட்டோம்"

## இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு

ஜாகர்த்தா, டிச. 16

அடுத்த மார்ச் மாதம் மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் கலந்து கொள்வதில்லை என இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்திருக்கிறது.

கட்சியின் இந்த முடிவை அதன் தலைவர் திரு. டி. என். எய்டிட், ஜாகர்த்தாவிலுள்ள ரஷ்யத் தூதர் திரு. என் ஏ. மிகாய்லோவிடம் சமர்ப்பித்தார்.

மாஸ்கோ மகாநாட்டில் எல்லா சோஷலிஸ்ட் நாடுகளையும் சேர்ந்த தொழிற் சங்கங்களும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் கலந்து கொண்டால் ஒழிய இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சி அதில் கலந்து கொள்ளாது என திரு. எய்டிட் சோவியத் தூதரிடம் தெரிவித்தார்.

இந்த மகாநாட்டினால் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் அபிப்பிராய பேதங்கள் அதிகரிக்கும் என்றும், எனவே ரஷ்யா இந்த மகாநாட்டை ரத்துச் செய்துவிட வேண்டும் என்றும் இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் தலைவர் யோசனை கூறியிருக்கிறார்.

காங்கோவில்

## கிளர்ச்சிக்காரர்கள் 20,000 பேரை கொலை செய்தனர்

## காமன்ஸ் சபையில் பிரிட்டிஷ் மந்திரி அறிவிப்பு

லண்டன், டிச. 16

காங்கோ கிளர்ச்சிக்காரர்கள் 20,000 க்கு மேற்பட்ட காங்கோலியர்களைக் கொலை செய்திருப்பதாயும், ஸ்டான்லிவில்லில் மட்டும் 5000 பேரை அவர்கள் படுகொலை செய்ததாயும் பிரிட்டிஷ் வெளிநாட்டு ராஜாங்க மந்திரி திரு ஜார்ஜ் தாம்ஸன் காமன்ஸ்சபையில் அறிவித்தார்.

காங்கோவிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளின் பாதுகாப்பு சம்பந்தமாக லியபோல்ட்வில்லிலுள்ள பிரிட்டிஷ் தூதர் காங்கோ அரசாங்கத்துடன் இடைவிடா தொடர்பு கொண்டிருக்கிறார். ஷோம்பேயும், அவரது அரசாங்கமும் எங்கள் கவலைபற்றி நன்கு அறிவார்கள். இவ்விஷயம்பற்றி சட்டபூர்வமான அரசாங்கத்துக்கெதிராக ஆயுதக்கலகம் செய்பவர்களுடன் நம்மால் தொடர்பு கொள்ளமுடியாது" என்றும் மந்திரி கூறினார்.

"கலகக்காரர்கள் பகுதியில் 27 பிரிட்டிஷாரும், 2 அவுஸ்திரேலியரும், 1 நியூஸிலந்துக்காரரும் இருப்பதாகக்கருதுகிறோம். தற்போது இவர்களை மீட்பதற்கான சரியான வழி காங்கோ ராணுவத்தின் முன்னேற்றமேயாகும். ஸ்டான்லிவில்லில் வீழ்ச்சிக்குப்பின் 15 பிரிட்டிஷார் உட்பட பல நூறு பிரஜைகளை காங்கோ ராணுவம் மீட்டிருக்கின்றது" என்றும் அவர் கூறினார்.

## கடவுளின் அருள் இருந்தால்...

ஜாகர்த்தா, டிச 16

"கடவுளின் அருள் இருந்தால் எனது கடைசி மூச்சு வரை இந்தோனேஷிய மக்களுக்குத் தலைமை வகித்து புரட்சியை நடத்திச் செல்வேன்" என ஜனாதிபதி சுகர்ணே கூறினார்.

## காங்கோ கிளர்ச்சிகாரர்களுக்கு 12விமானங்களில் ஆயுதங்கள்

## ஜெனரல் மொபுட்டு குற்றச்சாட்டு

நியூயோர்க், டிச 16

காங்கோவை அமெரிக்காவும் ரஷ்யாவும் தம்மிட்டமே நைஜீரிய வெளிநாட்டுமந்திரி ஆதரித்திருக்கிறார். நேற்று பாதுகாப்புசபையில் அவர் பேசினார்.

அதேசமயம் 12 விமானங்கள் காங்கோவில் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு சூடானில் வந்து இறங்கியதாகக் காங்கோ பிரசம சேனாதிபதி மொபுடு நிருபர்களிடம் கூறினார். இந்த விமானங்கள் ஐக்கிய அரபியக் குடியரசிலிருந்தும் அல்ஜீரியாவிலிருந்தும் வந்ததாக அவர் கூறினார்.

ஆனால் இவைகளில் வைத்திய சாதனங்களே வந்தன என்றும் ஆயுதங்கள் அல்ல என்றும் சூடான் அதிகாரிகள் மறுத்திருக்கின்றனர்.

## நேரு நினைவு உரை

அலகாபாத், டிச 16

அலகாபாத் பல்கலைக்கழகம் நேரு நினைவு சொற்பொழிவு உரைத் தொடரை ஆரம்பிக்கவிருக்கிறது. முதல் உரையை ஆச்சாரியா கிருபளானி செய்துவார். இரண்டாவது உரை பிரதமர் சாஸ்திரியால் வழங்கப்படும். லார்ட் ரோசோம, மவுண்ட் பேட்டன்பிரபு உட்பட வேறு பல உலகப் பிரமுகர்களின் உரைகளும் இடம் பெறும்.

## பர்மாவில் ஸ்ரீமதி காந்தி

புதுடில்லி, டிச. 16

பர்மியப் புரட்சி சபைத் தலைவர் ஜெனரல் நீவின்னின் அழைப்பைத் தொடர்ந்து, ஸ்ரீமதி இந்திராகாந்தி இன்று ரங்கூனுக்குப் புறப்பட்டார். பர்மாவில் அவர் 4 தினங்கள் தங்குவார்.

## "சீனு ஒரு கிழட்டுப் புலி; எங்களுக்குப் பயம்கிடையாது"

## அமெரிக்கா நொருக்க வேண்டும் என்கிறார் தென் கொரியமந்திரி

லண்டன், டிச. 16

கொரியாவில் வளர்ச்சியுறும் சீன பலத்திற்கெதிராக தென் கொரியாவில் தனது ராணுவ ஏற்பாடுகளை அமெரிக்கா தீவிரப்படுத்த வேண்டும் என தென்கொரிய வெளிநாட்டுமந்திரி டாக்டர் டொங் வொன் லீ கூறினார்.

பிரிட்டிஷ் பிரதமமந்திரி திரு வில்ஸனுடன் இதர தலைவர்களுடனும் பேச்சு நடத்திய பின் அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

"சீனாவுடன் செயலாற்ற சுதந்திர உலகுக்குத் தைரியமில்லை. அமெரிக்கா தென்கொரியாவில் ராணுவசாதனங்களை அதிகரிப்பதன்மூலம் பதிலடி கொடுக்க வேண்டும். கம்யூனிஸ்டுகளின் அபாயம் இருக்கும்வரை எங்களுக்கு ராணுவப் பாதுகாப்பு அவசியம். ஆனால் சீனாவில் என்ன நடைபெற்றபோதிலும் எங்களுக்கு பயமில்லை" என்றும் டாக்டர் லீ கூறினார்.

"சில நாடுகள் சீனாவுக்குப் பயப்படுகின்றன. ஆனால் சீனா கிழட்டு புலி என்பது எங்களுக்குத் தெரியும். அணு ஆயுதங்களுடன் அது இளம் புலியாக விளங்க அதிக காலமாகும்" என்றும் அவர் கூறினார்.

## பாகிஸ்தான் இராணுவ கோஷ்டி

கராச்சி, டிச. 16

ஐக்கிய அரபியக் குடியரசுக்கு விஜயம் செய்திருந்த பாகிஸ்தான் ராணுவ தூதுகோஷ்டி இன்று கராச்சி திரும்பியது. பிரதம சேனாதிபதி ஜெனரல் முகம்மது மூசா தலைமையில் இத் தூதகோஷ்டி கெய்ரோவுக்குச் சென்றிருந்தது.

## சமஸ்கிருதம் மூலம் மேல்படிப்பு

புதுடில்லி டிச. 16

சமஸ்கிருதம் மூலம் மேல்படிப்புக்கு துவக்கம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என பிரதமந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி கூறினார்.

## சங்கர் சிறுவர் பரிசுகள்

புதுடில்லி, டிச. 16

சிறுவர்களுக்கான 'சங்கர்ஸ் வீக்லி' வருடாந்த ஓவிய, கட்டுரைப் போட்டியில் வெளிநாட்டுச் சிறுவர்களுக்கான பரிசுகள், அந்தந்த நாட்டுத் தூதர்களிடம் வழங்கப்பட்டது.

ஓவியத்துக்கான ராஷ்டிரபதியின் தங்கப்பதக்கம் ஜப்பானியச் சிறுவன் ஒருவனுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த கட்டுரைக்கான தங்கப்பதக்கம் இந்தியச் சிறுவன் ஒருவனுக்கு வழங்கப்பட்டது.

24 ஜவஹர்லால் நேரு தங்கப் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

## இத்தாலியின் கிரகம்

ரோம், டிச. 16

அமெரிக்க உதவியுடன் வான்வெளிக்கிரகம் ஒன்றை இத்தாலி அனுப்பிருக்கிறது.

## பெரியபோர்க்கப்பலை இந்தியா கட்டும்

பம்பாய், டிச. 16

விரைவில் பெரிய போர்க்கப்பல்களை கட்டும் முயற்சி இந்தியாவில் ஆரம்பமாகும் என கடற்படைத் தலைவர் வைஸ் அட்மிரல் சோமன் கடற்படை தின வைபவத்தில் அறிவித்தார்.

கடந்த 1959 முதல் 1961 வரை 8 சிறிய போர்க்கப்பல்களையும் ஒரு விமானந்தாங்கிக் கப்பலையும் இந்தியா வாங்கியிருப்பதாய் மேலும் அவர் கூறினார்.

## 'ஏர்லைன்ஸ்' லாபம் 1 கோடி!

புதுடில்லி, டிச 16

1963—64-ம் ஆண்டில் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்கள் 10 லட்சம் பிரயாணிகளை ஏற்றிச் சென்றன என்றும் ஏர்லைன்ஸ் கார்பரேஷனுக்கு 1கோடி ரூபாய் லாபம் கிடைத்தது எனவும் அறிவிக்கப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் 20 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

## வட இந்தியாவில் கடும்பனி

### பலர் மரணம்

ஸ்ரீநகர், டிச. 16

காஷ்மீரில் கடும்பனி காரணமாக ஆறுகளும் ஏரிகளும் உறைந்து கெட்டியாகிவிட்டன.

உத்தரப் பிரதேசத்தில் குளிரினால் மாண்டவர்களின் தொகை 17 ஆக உயர்ந்திருக்கிறது.

கல்கத்தாவில் குளிருக்கு ஒருவர் பலியானார்.

அமிர்தசரஸில் 2ம் நாளாக கடும்பனி ஏற்பட்டிருக்கிறது

## தொழிலதிபர்கள் தூது கோஷ்டி

புதுடில்லி. டிச. 16

இந்தியத் தொழிலதிபர்கள் தூதகோஷ்டி ஒன்று 8 மேற்காசிய நாடுகளுக்குவிஜயத்தை மேற்கொண்டிருக்கின்றது. முன்பு இதே போன்ற ஒரு தூதகோஷ்டி சில ஆபிரிக்க நாடுகளுக்கும் சென்று வந்தது.

## கம்யூனிஸ்ட் கட்சி கூட்டம்

பம்பாய், டிச, 16

பம்பாயில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டத்தில் யூகோஸ்லேவியப் பிரதிநிதி பேசுகையில் சீனாவின் போக்கு பற்றி கண்டனம் தெரிவித்தார். உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்துவதே சீனாவின் நோக்கம் என்று அவர் கூறினார். போர்த்துக்கல்கம்யூனிஸ்ட் கட்சி அனுப்பியுள்ள ஒரு செய்தியில் சலஸாரின் சர்வாதிகார ஆட்சி பற்றி கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

## 90 நகர தபாற்கந்தோர்கள்

சென்னை, டிச. 16

புதுச்சேரி, காரைக்கால் உள்ளிட்ட தமிழ்நாட்டில் நடப்புத் திட்ட இறுதிக்குள் குறைந்தது 90 நகர தபாற்கந்தோர்களும், 600 கிராம தபாற்கந்தோர்களும் திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஜேர்மனியில் ஷோம்பே விரோத ஆர்ப்பாட்டம்

பொன், டிச. 16

காங்கோ பிரதமர் திரு. ஷோம்பேக்கு எதிராக இங்கு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. மேற்கு ஜேர்மன் தலைவர்களை அவர் சந்திக்கவிருக்கிறார்.

## நேட்டோவில் கருத்துவேற்றுமை

பாரிஸ், டிச. 16

இங்கு நடைபெறும் நேட்டோ மந்திரிகள் மகாநாட்டில் நேட்டோ பல தேசப்படை குறித்துக் கடும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## சீனாவுக்கு ஆதரவு

லண்டன், டிச. 16

ஐ. நா. பொதுச்சபையில் சீனா பற்றிய விஷயம் வரும்போது அதை ஐ. நா.வில் அனுமதிப்பதற்குச் சாதகமாக பிரிட்டன் வாக்களிக்குமெனப் பிரதமர் வில்சன் கூறினார்.

## சீன யோசனைக்கு ஆதரவு

பீகிங், டிச. 16

அணு ஆயுத ஒழிப்புப் பற்றி உலகத் தலைவர்கள் மகாநாடு நடைபெறவேண்டுமென்ற சீன யோசனையை ருமேனியாவும் பர்மாவும் ஆதரித்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

பிபிலை கொலை வழக்கு

# முன்னாள் எம். பி. யை கொலை செய்ய உதவுமாறு பிபிலை எம். பி. கேட்டார்

— சாட்சி

## பிபிலை எம். பி. க்கு தொடர்ந்து ரிமாண்ட்; 2ம் எதிரிக்கு பகிரங்கவாரண்ட்

பதுளை, புதன்

"முன்னாள் பிபிலை எம். பி.யை சுட்டுக் கொல்வதற்கு ஒரு ஆள் தேவையென தற்போதைய பிபிலை எம். பி. என்னிடம் கேட்டார்" என்று முன்னாள் பிபிலை எம். பி கொலைவழக்கில் சாட்சியமளித்த உதவித் தலைமை ஆசிரியர் திரு எஸ். ஏ. ஜெயவீரா கூறினார்.

முன்னாள் பிபிலை எம். பி கொலை வழக்கு நேற்றுக் காலை பதுளை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் திரு. ஜே. பி சி. கவாரிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. 2-ம் எதிரியான சைமன் சிங்கோ இன்னும் கைது செய்யப்படவில்லை. 1-ம் எதிரியும் சுதந்திரக்கட்சி எம். பியுமான திரு டி. எம். குணசேகரா ரிமாண்டிலிருந்து நேற்றுக் கோர்ட்டிற்கு கொண்டு வரப்பட்டார்.

விசாரணையை பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கில் யூ என் பி.க் கட்சியைச் சேர்ந்த பிபிலை எம். பியும், கிராமசபைத் தலைவருமான திரு ஆர். எம் குணசேகராவை சுட்டுக் கொலை செய்ததாக, தற்போதைய பிபிலை எம். பியும், சுதந்திரக் கட்சி அங்கத்தவருமான டி. எம். குணசேகரா, சைமன் சிங்கோ ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு மக்மை பெரேரா, திரு. ஸ்ரான்லி திலகரத்னவின் உதவியுடனும், ஜே. சி. கொத்தலவலவின் அனுசரணையுடனும் ஆஜரானார். வழக்கை அரசின் தரப்பில் பதுளை ஏ. எஸ். பி திரு. டி. எஸ் ரணசிங்க, திரு சி. டீசபதியின் உதவியுடன் வழக்கை நடத்தினார்.

தம்பகல, எல்பிட்டியா வித்தியாசாலை உதவி தலைமை ஆசிரியரான திரு. எஸ. ஏ. ஜெயவீரா சாட்சியமளிக்கும் போது தொடர்ந்து கூறியதாவது:

எனது மனைவியின் சகோதரியின் மகனுக்கு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் உத்தியோகம் எடுத்துத் தரும்படி பிபிலை எம் பி. யிடம் கேட்கச் சென்றேன். அப்பொழுது அவர் முன்னாள் பிபிலை எம் பியை சுட்டுக் கொலை செய்ய ஒரு ஆளைப் பிடித்துத் தரும்படி கூறினார்.

மெத்தகம கிராமசபை தேர்தலில் காலஞ்சென்ற குணசேகரா போட்டியிட்டு வெற்றி பெற்ற பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் கிராமசபை தேர்தல் நடைபெற்று ஐந்து நாட்களுக்குப் பின்தான் 1-ம் எதிரியின் வீட்டிற்குச் சென்றேன். உத்தியோக விஷயமாகப் பேசுவதற்கே சென்றேன். அப்பொழுதுதான் முன்னாள் எம் பியை சுட்டுக் கொலை செய்ய உதவி செய்யும்படி கூறினார். நான் அதற்கு மறுத்து வேறு ஒரு ஆளைப் பிடித்து தருவதாக வாக்குறுதியளித்தேன். ஹொறணையில் உள்ள ஒரு ஆளைப் பற்றியும் அவரிடம் கூறினேன்.

ஆகஸ்ட் மாதம் 20-ந் திகதி நான் கொட்டபோவவில் உள்ள ஒரு கோவிலுக்குச் சென்றேன். அக்கோவில் எதிரியின் வீட்டிலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ளது. அதன்பின் எம் பி வீட்டிற்குச் சென்றேன். அப்பொழுது எம் பி தான் கொழும்புக்குச் செல்வதாகவும், ஹொறணையிலுள்ள அந்த ஆளைக் கண்டு பேசுவதற்காக வரும்படி கூறினார்.

முன்னாள் எம் பியை கொலை செய்வதற்காக அப்புஹாமி என்பவரை ஒழுங்கு செய்வதற்காக நான் கதிர்காமத்திற்கும் சென்றிருக்கிறேன். இவ்விஷத்தை நான் அப்புஹாமியிடம் கூறியபொழுது அவர் மறுத்துவிட்டார் ஆகவே சிமியன் சிங்கோவை ஒழுங்குசெய்வதாக எம் பியிடம் கூறினேன் 2-வது எதிரியான சிமியன் சிங்கோ ஒரு வியாபாரி அதன்பின் காரில் ஹொறணையிலுள்ள சிமியோன் சிங்கோவின் வீட்டிற்கு சென்றனும். இவ்விஷயதலத அவரிடம் கூறியபொழுது தான் இவ்விஷயம் பற்றி ஆலோசித்து கூறுவதாக முதலில் கூறினார்.

பிபிலை பொலிஸ இன்ஸ்பெக்டர் திரு. புசல்லா சாட்சியமளித்தபோது சிமியோன் சிங்கோவை கைதுசெய்வது சம்பந்தமாக ஹொரணை பொலிஸ உத்தியோகத்தர் ஒருவருடன் ஆலோசனை செய்ததாகவும் ஆனால் சிமியோன் சிங்கோவின் இருப்பிடம் கண்டு பிடிக்கப்படவில்லையென்றும் கூறினார். ஹொரணை பொலிஸ சார்ஜன்ட் திரு முனசிங்காவும் சாட்சியமளித்தார்.

2-வது எதிரி சிமியோன் சிங்கோ தலைமறைவாக இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதிபதி அவர் மீது பகிரங்க வாரண்ட் பிறப்பித்தார். 1-வது எதிரியை தொடர்ந்து ரிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். ஜனவரி 1-ம் திகதிவரை விசாரணை ஒத்திபோடப்பட்டுள்ளது.

## பர்மாவுடன் அரிசிப் பேச்சு

### விசேஷதூதர் நாளை ரங்கூன் புறப்பாடு

கொழும்பு, புதன்

1965-ம் ஆண்டு இலங்கை-பர்மா அரிசி ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா, பர்மியத் தலைவர் ஜெனரல் நீவினுக்கு விசேஷதூதர் மூலம் ஒரு செய்தியை அனுப்பியிருக்கிறார்.

வெளிவிவகார டைரக்டர் திரு. கிலான்வில்லே பீரிஸ், உணவுக் கமிஷனர் திரு. பி ஏ. சில்வா ஆகிய இருவரும் பிரதமரின் செய்தியுடன் பர்மாவுக்குப் புறப்பட்டனர்.

கடந்த அக்டோபர் மாதம் இலங்கை வந்த பர்மிய தூதுகோஷ்டி ஒரு டன் அரிசிக்கு 37 பவுன் தரவேண்டுமென வற்புறுத்தியதால் அப்போதைய பேச்சுகள் முறிந்துவிட்டன.

## மீன்பிடிகாரர் புகார்

திருமலை, புதன்

வல்வெட்டித்துறையிலிருந்து பன்னிரண்டு யந்திரப்படகுகளில் வந்த எழுபது மீன்பிடிகாரர்கள் தங்களைத் தாக்குவதாகப் பயமுறுத்தி தாங்கள் மீன்பிடிக்கும் பகுதிகளில் மீன்பிடித்ததாயும் இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாறும் குச்சவெளியைச் சேர்ந்த மீன்பிடிகாரர்கள் திருமலை அரசாங்க ஏஜெண்டைக் கோரியுள்ளார்கள்.

## இளம்பிள்ளை வாதம் அதிகரிப்பு

கொழும்பு, புதன்

கடந்த இரு மாதங்களில் இளம்பிள்ளைவாதம் அதிகரித்திருக்கிறது என சுகாதார அமைச்சு அறிவித்திருக்கிறது. இவ்வாண்டு நவம்பர் மாதம் வரை 170 பிள்ளைகளுக்கு இளம்பிள்ளை வாதம் கண்டிருக்கிறது முன்பு தடுப்பு மருந்து கொடுக்கப்படாத கொழும்பைச்சேர்ந்த பகுதிகளில் தான் இந்த நோய் தலைகாட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## நேபாளம்

காட்மாண்ட், டிச. 16

நேபாளத்தில் மன்னர் கிரவரகத்தின் நான்காவது ஆண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டது.

## செய்திச் சுருக்கம்

வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் சகலரும் தமது வருடாந்த வருமானம் சம்பந்தப்பட்ட கணக்குகளை வருமான வரி இலாகாவிற்கு அனுப்பி தாம் வரிவிதிப்புக்கு உட்பட்டவர்களாக, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று வருமான வரி இலாகா, வட்டார வரி விதிப்பு அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

∴ ∴ ∴

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரில் ஒரு பிரிவினருக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டபின், அவர்கள் இந்நாட்டுடன் ஒன்றிவிடுவராகையால், இவர்களுக்கென தனி வாக்காளர் ஜாபிதா ஏதற்காக ஏற்படுத்த வேண்டுமென்பது புரியாத புதிராக விருக்கிறதென்று நுவரெலியா மாநகர சபைக் கூட்டத்தில் தனிவாக்காளர் ஜாபிதா முறையை ஆட்சேபித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

∴ ∴ ∴

பொதுத் தேர்தலுக்கான நியமனபபத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்புவரை பத்துப் பேர்களுக்குக் குறையாத அபேட்சகர்களை தேர்தலில் நிறுத்தும் சகல கட்சித் தலைவர்களுக்கும் வானொலியில் பேச அனுமதியளிக்க வேண்டுமென்று எதிர்கட்சிகள் அரசாங்கத்தை வற்புறுத்துமெனத் தெரியவருகிறது.

∴ ∴ ∴

அகில இலங்கையிலுமுள்ள பீடி உற்பத்தியாளர்களும் பீடி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்களும் போதியளவு பீடி இலையும் புகையிலையும் கிடைக்காததன் காரணத்தால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர் என அறியப்படுகிறது.

## இரண்டு நேர வகுப்புக்கள் இல்லை

கொழும்பு, புதன்

அடுத்த ஆண்டு பாடசாலை சிரேஷ்டபிரிவுகளில் இரு நேர வகுப்பு இருக்காது எனகல்வி இலாகா அறிவிப்பு கூறுகிறது. ஜி. ஸி. ஈ. பிரிவுகளுக்கு இருநேர வகுப்புக்கள் நடத்தப்படுமென்ற கல்வி இலாகாவின் முடிவு வாபஸ் பெறப்பட்டிருக்கிறது.

## உடைந்துவிழும் நிலையிலுள்ளது

கொழும்பு, புதன்

கொழும்புக்கருகில் சேதவத்தையிலிருக்கும் நூறு வயதான போகொடை பேராவிகாரை எந்நேரமும் சிதையக்கூடிய நிலையிலிருக்கிறது. இதைப் பழுதுபார்க்க ரூ 20,000 தேவைப்படுமென அதன் காப்பாளர் தர்மலோகநாயக்க தேரோ கூறினார்.

## பதிவுச்சட்டம் தயார்

கொழும்பு, புதன்

மக்களைப் பதிவு செய்வதற்கான சட்டம் நீதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டதாக அமைச்சின் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Jean Marias-Dany Robin
in
MYSTERIES OF PARIS
(Totalscope - Color)

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன் 481
சிவாஜி—மாதுரிதேவி
நடித்த
மனிதனும் மிருகமும்

ராஜா சினிமா
(சுழிபுரம்)
ஜெமினி — சாவித்திரி
நடித்த
மணமாலை

3-வது மகத்தான வாரம்!
சிங்கலி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (அட்டன்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத பக்தியை மூட்டி,
தெய்வத்தின் நிலை அடைந்து தமிழர் உள்ளத்தில் வாழும் - பட்டினத்தார்



பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
எம். ஆர். ராதா
ஜெமினி சந்திரா
எஸ். ராமராவ்
எஸ். டி. சுப்புலக்ஷ்மி
எஸ். ஆர். ஜானகி
நடித்த
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன்: கே. சோமு

BLACK FLAG
பக் கில்லர்
மந்திர சக்தி போன்று மூட்டைகளை கொன்று விடுகிறது.




கரப்பொத்தான்கள், கிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து- பக் கில்லர், இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்பிரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.

இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்-

ஏக விநியோகஸ்தர்கள்:
ஹாயிஸ் பிரவுன் அன் கம்பெனி லிமிட்டெட்,
மக்கலம் ரோடு, கொழும்பு.

# "70 ரூபாய் சம்பளத்தில் எதிரி என் மகளைக்காப்பாற்றமாட்டார்"

## அச்சுவேலி பெண்கடத்தல் வழக்கில் தாயார் சாட்சியம்

மாவிட்டபுரம், புதன்

"இரண்டாம எதிரி எனது சகோதரன் முகளைம், மூன்றும் எதிரிகள் எனது மருமக்கள். இவர்கள் எனது இளைய மகளின் மரண வீட்டில், மூத்த மகளை விவாகம் செய்ய வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை" என்று அச்சுவேலி பெண் கடத்துவழக்கில் சாட்சியமளித்த யுவதியின் தாயாரான திருமதி மாணிக்கம் சின்னத்தம்பி மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவபாக்கியம் என்னும் யுவதியை அதே ஊரைச் சேர்ந்தவர்களான தினகரி முருகுப்பிள்ளை, செல்லர் தினகரி, தினகரி பூபாலசிங்கம், நடராசா திருநாவுக்கரசு ஆகியோர் வரும் முதலாம் எதிரிக்கு விவாகம் செய்யும் நோக்குடன் கடத்திச் சென்றதாக காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிபதி திரு ஜி எவ் எச் அத்துமபாலு முன்னிலையில் குற்றம்சாட்டியுள்ளார்கள்,

### வழக்கறிஞர்கள்

முதல் மூன்று எதிரிகளின் சார்பில் திரு ஆர். ஜே செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானுர். 4-ம் எதிரியின் சார்பில் திரு. ரி. தம்பிரத்தினத்தில் அனுசரணையுடன் திரு கே வி எஸ் சண்முகநாதன் ஆஜரானுர், காங்கேசன் துறை குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் திரு சி சிவபாததின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. கே குணரத்தினம் வழக்கை நடாத்தினர்

### 1-ம் எதிரி மகளை தூக்கினர்

மாணிக்கம் தனது சாட்சியத்தில் கூறியதாவது:

நான் சம்பவதினம் காலை 9-30 மணியளவில் வீட்டுத் தலைவாசலில் வேறு ஒரு பெண்ணுடன் இருந்து இறந்த மகளை நினைந்து அழுது கொண்டிருந்தேன் அச்சமயம் சிவபாக்கியம் விறுந்தையில் இருந்தார் திடீரென மகள் "ஐயோ! ஐயோ!" எனக் கூக்குரலிட்டார் நான் திரும்பிப் பார்த்தபொழுது முகளைம் எதிரி மகளைத் தூக்கிக் கொண்டுவந்து முற்றத்தில் போட்டார் பின்னர் இயமனாவில் பிடிக்க முதலாம் எதிரியும் சேர்ந்து மகளைத் தூக்கிக்கொண்டு போனர்கள்,

### மகளிடம் ஓடினேன்

மாணிக்கம் தொடர்ந்து கூறியதாவது:

நான் குளறிக்கொண்டு மகளை நோக்கி ஓடினேன் அப்போது எனது சகோதரரான இரண்டாம் எதிரி என்னைப் பிடித்து தள்ளிவிட்டார் நான் விழுந்துவிட்டேன் அச்சமயம் முகளைம், மூன்றும் எதிரிகள் மகளை காருக்குள் போட்டுக் கொண்டுபோய்விட்டார்கள்

### சம்பளம் போதாது

முதலாம் எதிரிக்குச் சொந்தமாகக் கார் இல்லை அவர் வேறு ஒருவருடைய காரை 70 ரூபாய் சம்பளத்திற்கு ஓடுகிறுர் அந்தச் சம்பளம் எனது மகளைக் காப்பாற்ற போதாது முகளைம் எதிரி அமகானவர் அவர் ஒரு குணசாலி என்று நான் எனது மகளைத் தூக்க முன் நினைத்திருந்தேன் இப்போது என் மகளுக்கு கந்தையா என்பவரை விவாகம் செய்ய ஒழுங்குசெய்துள்ளோம் அவர் கொழும்பில் 800 ரூபா சம்பளத்தில் வேலை பார்க்கிறர் ஆனல் என்ன வேலை என்று தெரியாது

மேல்விசாரணை ஜனவரி 1-ம் திகதிவரை ஒத்திபோடப் பட்டுள்ளது

---

## மணிவாசகர் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

மணிவாசகர் விழாவின் 2-வது நாள் நிகழ்ச்சி இன்று பிற்பகல் 6-30 மணிக்கு காரைநகர் சிவன்கோவில் மண்டபத்தில் நடைபெறும். இன்றைய நிகழ்ச்சிகளுக்கு திரு. ஆ. தியாகராசா தலைமை வகிப்பார். தலைமைப் பேருரையை அடுத்து 'செம்மனச் செல்வி' என்னும் பொருள்பற்றி திரு மு. வைரமுத்து உரை நிகழ்த்துவார். "மணிவாசகர் வேண்டுவன" என்பது குறித்து வித்துவான், பண்டிதன், சைவப் புலவர் திரு ச. கந்தசாமி சொற்பொழிவாற்றுவார். தலைவர் நிறைவுரையை அடுத்து திருவாசகத் திருமுறை ஓதல் நடைபெறும்.

---

## வானெலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 17-12-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-15 திருவெம்பாவை கொழும்பு பொன்னம்பலவாணர் கோவிலிலிருந்து அஞ்சல், 6-50 சைவசற்சிந்தனை 6-55 இஸ்லாமியசற்சிந்தனை. 7-15 சேர்ந்திசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மலர், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை. 6-45 கின்னரின், 7-15 நேயர்விருப்பம், 7-45 நாடகம்—'நான் விமானம் டேன்'—எழுதியவர் கல்பொனசேர். 8-00 மூளைவிடிநிகழ்ச்சி, 9-15 தமிழேசை பாடல், 9-30 கர்நாடக இசை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00 இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 துதிப்பாடல்கள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 கிளாரினெட்—என் வீராசாமி, 2-40 ஜெயபேரிகை.

மாலை 5 15 துதிப்பாடல்கள், 5 45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 'இருக்கு வழி' — பேச்சு — வி டி தயாளுசாமி, 7-45 வயலின் — வி கந்தரோசன், 8-45 குரல் இசை 9-30 அகில பாரத நிகழ்ச்சி, 10-00 இரு வயலின்.

---

## காந்தி படத்திற்கு ரூ. 8 கோடி

லண்டன், டிச. 16

பிரிட்டனும் இந்தியாவும் கூட்டாகத் தயாரிக்கும் மகாத்மா காந்தியின் வாழ்க்கை பற்றிய படத்திற்கு 60 லட்சம் பவுன், (8 கோடி ரூபாய்க்கு மேல்) செலவாகும் என அறிவிக்கப்பட்டது.

---


## ORDER NISI

In the District court of Jaffna

In the matter of the Intestate Estate of the late Eliathamby Shivapiragasam Balasubramaniam of Vannarponnai West, Jaffna Deceased

Kamalambikai widow of E S Balasubramaniam of Vannarponnai West Jaffna Petitioner

Testamentary Jurisdiction | No 1570. T

Vs

1 Balasubramaniam Shivanandan of Vannarponnai West and

Minor 2. Balasubramaniam Kamalanandan of do The 2nd respondent is a minor appearing by his Guardian ad-litem the 1st Respondent

Respondents

This matter coming on for disposal before N Sivagnanasundram Esquire District Judge Jaffna on the 31st day of October 1964 in the presence of Messrs Selvarajah & Mahesan, Proctors on the part of the petitioner and the affidavit and petition of the above named petitioner having been read

It is orderd that the above named 1st respondent be appointed as Guardian-ad-litem over the minor the 2nd respondent and that the Letters of Administration to the estate of the above named deceased be issued to the petitioner as the widow of the said deceased, unless the respondents or any other person or persons interested shall appear before this court on or before the 22nd day of January 1965 and show sufficient cause to the satisfaction of this court to the contrary

The said minor to be produced in court on the said date

This 31st day of October 1964

Sgd N Sivagnanasundram
District Judge, Jaffna

Drawn by.
Sgd. Selvarajah & Mahesan
Proctors for Petitioner.

1215

---

ஊர்காவற்றுறை பட்டினசபை

கேள்விப்பத்திர விளம்பரம்

1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிவரை பின்வருவனவற்றுக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

1. கட்டிட வேலைகள்

(அ) 17? அடி நீள அடிதளம் கட்டுதல்

(ஆ) இரண்டு அறை வலகூடம் கட்டுதல்.

2. கடைக்குத்தகை

(அ) சந்தையிலுள்ள 1-ம் 2-ம், 3-ம் இலக்கக்கடைகளின் 1965-ம் ஆண்டுக் குத்தகை.

வேறு விபரங்கள் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பட்டினசபை,ஊர்காவற்றுறை

14-12-64 1227

---

ஊர்காவற்றுறைப் பட்டினசபை

1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 24-ம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு பட்டினசபை காரியாலயத்தில் பின்வருவன பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. கைபிடிம் 2 அங்குல தண்ணீர் இறைக்கும் பம்பும் குளாயும்.

2. பழைய லொறி டயர், பற்றறி, கதவு நிலைகள், பழைய பத்திரிகைகள், தளபாடங்கள், வண்டிச் சில்லுகள் முதலியன.

தலைவர் ப. ச

4-12-64 1228

---

வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உயர்ந்த ரகங்கள்-கண்கவர் டிசைன்களில் டக்கா. பிளேயின் இன்னும் பல நிறங்களில் கைத்தறிச் சேலைகள் விற்கப்படும். செசவு துண்டு நிலையம், 32, கொழும்புத்துறை ரோட், சுண்டிக்குளி. 1182

யாழ்ப்பாணம்-கண்டி வீதியில் கச்சேரிக்கு சமார் அரை மைல் தொலைவில் 2½ பரப்பு காணி, இரு அறைகளும், ஒரு ஆபீஸ் அறையுடனும் கூடியவீட்டுடன் விற்பனைக்குண்டு. ஈழநாடு மேற்பார்த்து. 1325

ஏ 30 ஸ்ரீ என் 8793 உடன் விற்பனைக்கு உண்டு. இல 251 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பார்வையிடலாம். 1329

### தேவை

பளைப்பகுதியிலே தென்னந் தோட்டமும், நெல் வயல்களும் மேற்பார்வை செய்வதற்கு நேர்மையுள்ள ஒருவர் தேவை. அனுபவம், தேவையான சம்பளம் முதலிய, விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். தோட்டம் C/o ஈழநாடு. 1330

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய பத்திரங்களைக் காணும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 13-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50. வைத்தியர் பரிபூரணானந்தம் தெல்லிப்பழையார் கோவில் அடி, யாழ்ப்பாணம்.


---

### உதைபந்தாட்டம்

## உதயதாரகை கழக சுற்றுப்போட்டி

கருகம்பசிட்டி, செவ்வாய்

கரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழக ஆதரவில் 7-வது வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வருகிற வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகிறது யாழ்ப்பாணத்தில் பலசிறந்த விளையாட்டுக் கழகங்கள் இவ்வருடம் பங்குபற்றும் இச்சுற்றுப்போட்டியின் முதற்பிரிவில் 11 கோஷ்டிகளும், இரண்டாம் பிரிவில் 4 கோஷ்டிகளுமாக மொத்தம் 15 கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. ஜனவரி மாதம் முதல் வாரம் வரை நடைபெறவிருக்கும் இப்போட்டிகளில் தினமும் இரு போட்டிகள் நடைபெறும் சாம்பியன் கோஷ்டிகளாகத் தெரியப்படும் முதற்பிரிவுக் கோஷ்டிக்கு 'கப்பிரமணியம்' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும் இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்கு 'கரும்பசிட்டி சலேஞ்' வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும்.

---

### கைத்தொழில்

## பொருட்காட்சி பின்போடப்பட்டது

கொழும்பு, புதன்

இலங்கை கைத்தொழில் பொருட்காட்சி பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பித்து மார்ச் மாதம் 3-ம் திகதிவரை நடைபெறும்.

ஜனவரி 15-ம் திகதிபொருட்காட்சி ஆரம்பிக்கப்படும் என்று ஏற்னவே அறிவிக்கப்பட்டிருந்தது.

பொருட்காட்சியின் போடப்பட்டது எந்தவித அரசியல் காரணத்திற்காகவுமில்லையென்று கைத்தொழில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.


ஈழநாடு தினக்குறிப்பு 1965

கடந்த வருடங்களைப் போலவே 1965-ம் ஆண்டு ஈழநாடு தினக்குறிப்பு அதிக கவர்ச்சியுடனும், அநேக தகவல்களை உள்ளடக்கியும் வெளிவருகிறது

மாணவர்களுக்கு இதனுல் பெரும் பயனுண்டு!

இன்னும் சில தினங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

விலை ரூபா 1-50

---

உங்கள் கைகளைக்கொண்டு உங்கள் சீவியத்தை அறியுங்கள்

சோதிட கைரேகை நிபுண பேராசிரியர்

விந்தாவைக்

கலந்து உங்கள் எதிர்காலத்தை அறியுங்கள்.



1வருட உத்தரவாதம் செய்து கொடுக்கப்பட்ட யந்திரத் தகட்டின் காலம் முடிவடைந்தவர்கள் புதுப்பித்துக்கொள்ளலாம்.

அவர் தங்கியிருக்கும் இடம்:

லேக்வியூ ஹோட்டல்

1-ம் இலக்க அறை

91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

